தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

நவம்பர், திசம்பர் - 2016

**P103 இக்காலக் கவிதையும் சிற்றிலக்கியமும்**

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. வாணிதாசனின் முதல் கவிதை நூல் எது?
2. “குழந்தைக் கவிஞர்” என அழைக்கப்பட்டவர் யார்?
3. மலைக்கள்ளன் என்னும் புதினத்தின் ஆசிரியர் யார்?
4. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் கவிதைக்குப் பின்னணியாக இருந்த கவிஞர்கள் யாவர்?
5. முடியரசனின் இயற்பெயர் யாது?
6. குழந்தைப் பாடலில் சிற்பி தரும் அறிவுரை என்ன?
7. கவிக்கோ என்னும் அடைமொழியால் அழைக்கப்படுபவர் யார்?
8. அகப்பொருள் சிற்றிலக்கியங்களுக்கு சான்று தருக.
9. உலா இலக்கியத்தின் இரு நிலைகள் யாவை?
10. கலம்பக இலக்கிய வகையின் முதல் நூல் யாது?
11. மதனவல்லி விளையாடிய விளையாட்டு எது?
12. திருமாலின் மாலை எது?
13. முதல் பிள்ளைத்தமிழ் நூல் எது?
14. மடல் எந்த உருவத்தில் செய்யப்பட்டிருக்கும்?
15. காரைக்கால் அம்மையார் பாடிய அந்தாதி நூல் எது?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**
**(5x3=15)**

1. தமிழ்த்தேசியம் என்பதன் பொருள் யாது?
2. மணிக்கொடிக்காலக் கவிஞர்கள் எவரேனும் மூவரைக் குறிப்பிடுக.
3. பெண்ணியச் சிந்தனை என்றால் என்ன?
4. கவிமணி படைப்புகளில் பாடுபொருள் யாது?
5. குறும்பா – விளக்கம் தருக.
6. அந்தாதி என்றால் என்ன?
7. கேசாதி பாதம், பாதாதி கேசம் என்றால் என்ன?
8. கலம்பகம் குறிப்பு வரைக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) புதுக்கவிதையின் தோற்றம் வளர்ச்சிக் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பெண் விடுதலைச் சிந்தனைகளாக பாரதியார் கூறும் கருத்துக்கள் குறித்து எழுதுக.

2. (அ) கவிமணிப் படைப்புகளில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மனித நேயத்தின் சிறப்புகளாக கவிஞர் சிற்பி கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

3. (அ) உலா இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.
.

(அல்லது)

(ஆ) பிள்ளைத்தமிழ் இலக்கணம், வகைகள், பருவங்கள் குறித்து எழுதுக.

✱✱ ✱